மின்னிதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM තේසියම්

WELLA HAIR DRESSING
WELLA வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

மலர்: 02 | குரல்: 128 | வள்ளுவர் ஆண்டு 2054 | செவ்வாய்க்கிழமை 09.01.2024 | பக்கங்கள் 06

## தவராசாவின் கோரிக்கையை ஏற்ற யாழ் நீதிமன்றம்! வழக்கை கிடப்பில் போட்டு 17 பேரும் விடுதலை!



பக்கம் 2

## முல்லைத்தீவில் மாபெரும் போராட்டம்!

### வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் தலைவியை விடுதலை செய்யக்கோரி..






பக்கம் 4

## திருமலையில் மாபெரும் பொங்கல் திருவிழா! ஆளுநர்செந்தில் தொண்டமான் ஏற்பாடு!





பக்கம் 6

# வழக்கை கிடப்பில் போட்டு 17 பேரும் விடுதலை. சட்டத்தரணி தவராசாவின் கோரிக்கையை ஏற்ற யாழ் நீதிமன்றம்!



சொர்ணலிங்கம் வர்ணன்

ஜனாதிபதி பொங்கல் வருகை எதிர்ப்பு மற்றும் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணி ஆகியவற்றில் பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்ட இரு வழக்குகளையும் கிடப்பில் போட்டு விடுவிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி கேவி தவராசா வாதத்தை ஏற்று சந்தேக நபர்கள் 17 பேரையும் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் விடுவித்தது.

கடந்த வருடம் தை மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நிலையில் ஜனாதிபதி வருகையை எதிர்த்து இடம் பெற்ற போராட்டம் மற்றும் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய நடைபவனி என்பவற்றிற்கு எதிராக பொது மக்களுக்கு இடையூறு ஏற்பட்டதாக தெரிவித்து யாழ்ப்பாண பொலிசாரால் யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு ஏற்கனவே விசாரணைகள் இடம் பெற்று வந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை தவணை இடப்பட்டதற்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி சட்டத்தரணி கேவி தவராசா சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய நிலையில் குறித்த வழக்கு அடிப்படை ஆதாரமற்ற வழக்கு இதனை தொடர முடியாது வழக்கை கிடப்பில் போட்டு சந்தேகம் நபர்களை அனைவரையும் விடுதலை செய்யுங்கள் என மன்றில் தனது வாதத்தை முன் வைத்தார்.

இதன் போது பொலிசார் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற வேண்டி உள்ளதால் வழக்கை தொடர வேண்டும் என மன்றிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இதனை மறுத்த ஜனாதிபதி சட்டத்தரணி வழக்கு ஒரு வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து செல்வதால் பொலிசார் அடிப்படை ஆதாரம் இல்லாத வழக்கை தொடர்ந்து நடாத்துவதை ஏற்க முடியாது .

அதேபோல் பொலிசார் குறித்த போராட்டத்தால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்பட்டது என கூறும் நிலையில் பொதுமக்கள் சார்பில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டு இருக்க வேண்டும் அவ்வாறு எந்த ஒரு முறைப் பாடும் முன் வைக்கப்படாததால் இது ஒரு அடிப்படை ஆதாரம் அற்ற வழக்கு என மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தார்

பொலிஸார் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்றால் அதுரை வரை வழக்கை கிடப்பில் போட்டு அனைவரையும் விடுதலை செய்யுமாறு வாதத்தை முன்வைத்தார்.

இதனை ஏற்ற மன்று சட்டமா அதிபரின் ஆலோசனையை பொறும் வரை வழக்கை கிடப்பில் போட்டு அனைவரையும் விடுதலை செய்தது.

குறித்த இரு வழக்குகள் சார்பில் சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டவர்களில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் செல்வம் அடைக்கலநாதன் சாள்ஸ் நிர்மல நாதன் வேலன் சுவாமிகள் யாழ் மாநகர முன்னாள் முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தின் யாழ் மாவட்ட தலைவி கோதை ஆகியோர் மன்றுக்கு சமூகமளித்தனர்.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!

தொலைபேசி :

+94 76 567 3339



# யாழ் பொலிஸாரின் நிர்வாக ஊழலுக்கு நடவடிக்கை வேண்டும்!

## யாழ் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தவபாலன் ஜனாதிபதியிடம் கோரிக்கை!



சொர்ணலிங்கம் வர்ணன்

யாழ் பொலிசாரின் நிர்வாக ஊழல் மற்றும் பொதுமக்கள் சட்டத்தரணிகள் மீது ஆதாரமற்ற வழக்குகள் தாக்கல் செய்வதை நிறுத்த வேண்டும் என யாழ் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தவபாலன் ஜனாதிபதியிடம் கோரிக்கை முன்வைத்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ் விஜயத்தின் போது வட மாகாண ஆளுநர் இல்லத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போது அவர் இவ்வாறு கோரிக்கை முன்வைத்தார்.

அவர் தனது கோரிக்கையில் தெரிவித்த முக்கிய விடையங்களான யாழ் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் மேல் நீதிமன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும். வட மாகாணத்தில் இருந்து மீதி சோபையான குழுவுக்கு செல்லும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியில் தமது பிரச்சினைகளை தெரிவிப்பதற்கு வசதி வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சனையை தீர்க்கும் முகமாக ஜனாதிபதி உடன் தலையீடு செய்து தமிழ் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பணிப்புரை விடுக்க வேண்டும்.

யாழ் மாவட்டத்தில் பொலிசாரின் நிர்வாக ஊழல்கள் அதிகரித்துள்ள நிலையில் சட்டத்தரணிகளை ஆதாரமின்றி முகதாவணையில் கைது செய்யும் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். அது மட்டுமல்லாது பொது மக்களை கைது செய்யும்போது தகுந்த காரணங்கள் ஆதாரங்கள் இன்றி கைது செய்யப்படுவதை நிறுத்த வேண்டும் அது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி பணிபுரை விடுக்க வேண்டும்.

மேலும் இலங்கையில் உள்ள மேன்முறையீட்டு நீதி மன்றங்கள் உயர்நீதிமன்றங்களில் உள்ள நீதி அரசர்களில் தமிழ் நீதி அரசர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மூன்று தமிழ் நீதியரசர்களும் உயர்நீதிமன்றத்தில் ஐந்து தமிழ் நிதியரசர்களையும் நியமிக்க வேண்டும் . இவ்வாறு பல்வேறுபட்ட விடயங்களை வலியுறுத்தி பதின்நான்கு பக்க அறிக்கையை ஜனாதிபதிக்கு வழங்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஏரிசி 85 கரங்கள் அமைப்பினால் பொங்கல் பானைகள் வழங்கிவைப்பு!







சொர்ணலிங்கம் வர்ணன்

இணுவில் ஏரிசி (ATC)கரங்கள் அமைப்பினால் வறுமைக்கோட்டுக்கு உற்பட்ட 100 பேருக்கு தைப்பொங்கலை முன்னிட்டு பொங்கல் பொதி வழங்கப்பட்டது. ஏரிசி 85 கரங்கள் அமைப்பின் தலைவர் ஆசிரியர் முருகவேள் தலையில் இடம்பெற்ற இன் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முன்னாள் வணிக பீடாதிபதி க.தேவராஜா சிறப்பு விருந்தினர்களாக ஏரிசி கல்வி நிறுவன அதிபர் இரா.அருட்செல்வம். கே ரி சி கல்வி நிறுவன அதிபர் ஞான கேதீஸ்வரன், தமிழ் பாட முன்னாள் ஆசிரிய ஆலோசகர் பாலா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பல்கலைக்கழக முன்னாள் வணிக பீடாதிபதி தேவராஜா கருத்து தெரிவிக்கையில் ஏரிசி 85 கரங்கள் அமைப்பு கடந்த முறை 85 பயனாளிகளுக்கு பொங்கல் பொதிகளை வழங்கிய நிலையில் இம்முறை நூறாக அதிகரித்துள்ளது.அவர்களின் இணுவில் மண்ணுக்கு பல்வேறு சேவைகளை ஆற்றி வருகிறார்கள் அவர்களின் சேவை தொடர்ந்தும் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட வறுமை கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு பொங்கல் பானை மற்றும் பொங்கலுக்கு தேவையான பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டது.

# முல்லைத்தீவில் மாபெரும் போராட்டம்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தலைவியை விடுதலை செய்யக்கோரி..







வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மீதான பொலிசாரின் அடாவடித்தனத்தை கண்டித்தும், வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் தலைவியை விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரியும் முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டோர்களின் உறவுகளால் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று இன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. வவுனியாவில் ஜனாதிபதி வருகையின் போது நியாயம் கேட்க சென்ற காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவி கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று (08.01.2024) காலை 10.30 மணியளவில் முல்லைத்தீவு புனித இராஜப்பர் தேவாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய ஆர்ப்பாட்ட பேரணியானது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக சென்று குறித்த பேரணியானது நிறைவு பெற்றிருந்தது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொலிஸ் அராஜகம் ஒழிக, விடுதலை செய் விடுதலை செய் ஜெனிற்றாவை விடுதலை செய், சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு, ரணில் அரசே நட்ட ஈடு வழங்கி எமது பேராட்டத்தை நிறுத்தக் கனவு காணாதே, பாதிக்கப்பட்ட உறவான ஜெனிற்றாவை உடன் விடுதலை செய், ஜனநாயக வழியில் போராடுபவர்களை கைது செய்வதுதான் ரணில் அரசின் நல்லிணக்கமா?, சர்வதேச விசாரணையே எமக்கான தீர்வு போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பி போராடடத்தில் ஈடுபட்டனர் .

போராட்டத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள், பெற்றோர்கள்,முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்






# பூர்ணா நர்த்தனாலயம் நடத்திய நிருத்திய நாட்டிய சங்கமம் சாவகச்சேரி கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது!





தென்மராட்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா ஆரியரத்ன தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் மாகாண நடனபாட ஆசிரிய ஆலோசகர் பாரதி சிவயோகநாதனும்இ சிறப்பு அதிதிகளாக ஓய்வு நிலை வலய கல்வி பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார்இ கோப்பாய் தேசிய சேமிப்பு வாங்கியின் முகாமையாளர் அன்ரன் யோகநாயகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சைந்தவி ஜனார்த்தனன், சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் தயாசக்தி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நாட்டிய சங்கமம் நிகழ்வில் பூர்ணா நர்த்தனாலாலய மாணவிகளின் நாட்டிய அரங்கேற்றங்களும் இடம்பெற்றன. நிகழ்வில் நடன மாணவர்கள்இ பெற்றோர்கள் பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

# ஜனாதிபதியின் விஜயம் வெற்றுப் பயணம்! ஒரு துண்டு நிலத்தைக் கூட விடவில்லை!




யாழில் ஜேவிபி விமல்ரட்நாயக்கா

ஜனாதிபதியின் வடக்கு விஜயம் மக்களின் வரிப்பணத்தை வீணடித்த வெற்றுபயண மாகவே அமைந்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரட்நாயக்கா தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சி தலைமை யகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும் பூர்த்தி செய்யாத வகையில் வாழ்ந்து கொண்டிருக் கின்றார்கள். காணி விடுவிப்பு ,மீள்கட்டு மானம் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கான தீர்வு, மற்றும் அரசியல் பிரச்சனைக் கான தீர்வு என தமிழ் மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில் வடமாகாணத்துக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஒரு துண்டு காணியேனும் அந்த மக்களுக்கு விடுவித்துக் கொடுக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ் விஜயத்தை எதிர்த்து யாழ் மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் போராட்டம் நடைபெற்றது.ஜனநாயக வழியில் தமது எதிர்ப்பை தெரிவித்த போராட்டக்காரர்களை பொலிசார் இழுத்துச் சென்றதையும் தாக்குதலுக்கு தயாராக இருந்த பொலிசாரையும் ஊடகங்களில் ஊடாகப் பார்த்தேன். நாட்டை அதல பாதாளத்திற்கு கொண்டு சென்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை ஜனாதிபதி கதிரையிலிருந்து மக்கள் விரட்டியடித்த போது ரணில் விக்கிரமசிங்க பின் கதவால் ஜனாதிபதியானார். நாட்டை முன்னேற்ற போகிறேன் என கூறிக்கொண்டு நாட்டு வளங்களை வெளிநாட்டுக்கு தாரைவாக்கம் செயற்பாட்டில் ரணில் விக்கிரமசிங்காக ஈடுபட்டு வருகிறார். நாட்டை பாதுகாப்பதற்காக பொதுமக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் சிவில் அமைப்பினர் மேற்கொள்ளும் போராட்டங்களை பாதுகாப்பு தரப்பினர் மூலம் அடக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார் .எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தியே ஆக வேண்டும் என அரசியல் அமைப்பு கூறுகின்றது. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி கதிரையில் மீண்டும் அமர்வதற்காக தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காது வடக்குக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளார். வட மாகாணத்தின் வளம் மிக்க பகுதிகளான மன்னார் பூநகரி தீவகம் போன்ற பகுதிகள் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு இருக்கும் நிலையில் அப் பிரதேச மக்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை. நாடு பொருளாதார ரீதியில் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் நிலையில் ஜனாதிபதி ஆடம்பரமாக வாகன தொடரணிகள் சகிதம் வருகை தந்து நான்கு நாட்கள் வடக்கில் முகாமிட்டமை மக்களின் பிரச்சனையை தீர்க அல்ல எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான பிரச்சாரமே என அவர் மேலும் தெரிவித்தார்.

# திருமலையில் மாபெரும் பொங்கல் திருவிழா!

## ஆளுநர்செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில்!







கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக 1008 பொங்கல் பானை,1500 பரத நாட்டிய கலைஞர்கள்,500 கோலங்களுடன் பொங்கல் விழா. இலங்கை வரலாற்றில் முதல் முறையாக 1008 பொங்கல் பானையுடன் ,1500 பரத நாட்டிய கலைஞர்களுடன்,500 கோலங்களுடன் பொங்கலை வரவேற்கும் முகமாக மாபெரும் பொங்கல் திருவிழா கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் நேற்று (08) திருகோணமலை மக்கேசர் விளையாட்டரங்கில் இடம்பெற்றது. பொங்கல் விழாவை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இலங்கை வரலாற்றில் முதல் முறையாக ஜல்லிக்கட்டு போட்டியை கிழக்கு மாகாண ஆளுநர் நடத்தியிருந்ததுடன் இலங்கையில் தமிழ் மக்களின் பாரம்பரிய வீர விளையாட்டை மீட்டெடுத்தமைக்காக உலகம் முழுவதும் இருந்து செந்தில் தொண்டமானுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துவரும் பின்புலத்தில் மற்றுமொரு சிறப்பம்சமாக பொங்கலை வரவேற்கும் "பொங்கல் திருவிழா" தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளார்.









